

# மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக

**"நான் இயேசுவைத் தேடப்போகிறேன். அவரைக் கண்டுபிடித்ததும் அவரைப்பற்றி மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கப்போகிறேன்" என்று சொன்னேன்.**

என் பெயர் பிளஸ்ஸிங்; தேவனுடைய ஏராளமான ஆசீர்வாதங்களுக்கு என்னுடைய வாழ்க்கை ஒரு சாட்சி.

நாங்கள் ஜிம்பாப்வேயில் வசிக்கிறோம். எங்கள் குடும்பத்தினர் ஞாயிறுதோறும் ஆலயத்திற்குச் செல்வார்கள்; ஆனால் பக்தியான குடும்பம் அல்ல. வாலிபல வயதிலேயே தேவனுக்காக ஊழியம் செய்ய விரும்பினேன். கிறிஸ்துவுக்காக திருமணம் செய்யாமலேயே வாழ விரும்புவதாக சபைத்தலைவர் ஒருவரிடம் கூறினேன்.

"நீங்கள் எந்தப் பையனையாவது விரும்புகிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை" என்று நான் சொன்னேன்.

"முதலாவது அந்த அனுபவம் உங்களுக்கு வேண்டும். அதன் பிறகு வாருங்கள்" என்று சொன்னார்.

நானும் அப்படியே செய்தேன். அதன்பிறகு ஆலயத்திற்குச் செல்வதையே நிறுத்திவிட்டேன்.

கல்லூரியில் தவறான நண்பர்கள் கிடைத்தார்கள். குடிக்க ஆரம்பித்தேன்; கேளிக்கை விருந்துகளில் கலந்துகொண்டேன்.

18 வயதானபோது, 21 வயதான ஒருவரை விரும்பினேன். சபைத் தலைவர் சொன்னதுபோலவே அந்த வாலிபரிடம் பழகினேன். அதனால் கற்பமானேன். எங்கள் கலாச்சாரத்தில், ஒரு பெண் கற்பமாகிவிட்டால், அதற்கு காரணமானவரோடு போய்த் தங்கிவிடவேண்டும். எனவே அந்த வாலிபரோடும் அவனுடைய அம்மாவோடும்

போய்த் தங்கினேன்.

அதன்பிறகு நான் எதிர்பார்த்ததுபோல எதுவுமே நடக்கவில்லை. நானும் அவரும் வேலைக்குச் செல்லாமல் இருந்ததால், எப்போதும் சண்டைபோட்டுக் கொண்டே இருந்தோம்.

எங்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள்; ஆனாலும் சண்டைபோட்டோம். திருமணவாழ்வின் அர்த்தம் எனக்குப் புரியவில்லை. எங்கள் இருவருக்குமே தனித்தனி கனவுகளும் எதிர்பார்ப்புகளும் இருந்தன; அவருடைய அம்மா என்னிடம் ஒரு சமயம்கூட அன்பாக நடந்ததில்லை.

என் கணவரின் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆராதனைகளில் கலந்துகொள்வேன்.

பிறகு எனக்கு சுகமில்லாமல் ஆனது; என் அம்மாவின் வீட்டிற்குச் சென்றேன்; வெகுநாட்களாக திரும்பி வரவே இல்லை.

வீட்டில் இருந்தபோது, மூன்று நாட்கள் இடைவெளியில் இரண்டு கனவுகள் கண்டேன்; இரண்டும் விநோதமான, ஆனால் ஒரே மாதிரியான கனவுகள். இரண்டு கனவுகளிலும், அபாயமணி ஒலிப்பதையும், மக்கள் அங்குமிங்கும் சிதறி ஓடுவதையும் பார்த்தேன். மேலும், ஒரு பெரிய கல் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தது; ஓர் அம்பு ஒரு சிலுவையைச் சுட்டிக்காட்டியது; அங்கு அநேகர் நின்றார்கள். “மனந்திரும்பு, உலகம் முடியப்போகிறது” என்று ஒரு சத்தம் பேசுவதைக் கேட்டேன்.

எனக்கு குழப்பமாக இருந்தது. உலகம் முடிவுக்கு வரப்போவது பற்றி என் கணவருடைய சபையில் யாரும் சொன்னதில்லை. அந்தக் கனவுகளின் அர்த்தமும் எனக்குப் புரியவில்லை.

என் கணவருக்கும் அந்தக் கனவுகளின் அர்த்தம் புரியவில்லை. ஆனால் நான் அவரிடம், “நான் இயேசுவைத் தேடப்போகிறேன். அவரைக் கண்டுபிடித்ததும் அவரைப்பற்றி மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கப்போகிறேன்” என்று சொன்னேன்.

ஆனால் இயேசுவை எங்கே கண்டுபிடிப்பது?

ஜிம்பாப்வேயில் வேலை கிடைப்பது கடினம்; எனவே நானும் என் கணவரும் வேலைதேடி போட்ஸ்வானாவுக்குச் சென்றோம். அங்கு செவந்த்-டே அட்வென்டிஸ்ட் திருச்சபையின் மூப்பர் ஒருவரைச் சந்தித்தோம்; அவர் எங்களுக்கு வேத பாடம் நடத்தினார். வேத வகுப்பு முடிந்ததும், உலகம் முடியப்போவதாகவும்,இயேசுசீக்கிரம்வரப்போவதாகவும் கூறினார். வேதாகமத்திலிருந்து வசனங்களைக் காட்டினார். இறுதியாக, என் கனவுகளின் அர்த்தம் புரிந்தது; எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது!

மேலும் வேதாகமத்திலிருந்து அநேக சத்தியங்களைக் கற்றுக்கொண்டேன்; வேதாகமத்தின் இயேசுவைக் கண்டுகொண்டேன். ஞானஸ்நானம் பெற்றேன்; அட்வென்டிஸ்ட் திருச்சபையில் சேர்ந்தேன்.

இயேசுவைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்கிற தீர்மானத்தில் உறுதியாக இருந்தேன். அவரைக்

கண்டுகொண்டேன்; அவர் மேலான அன்பை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்பினேன். சாம்பியா வில் உள்ள அட்வென்டிஸ்ட் கல் லூரியான ருசாங்கு பல்கலைக்கழ கத்தில் படிக்கத் தீர்மானித்தேன்.

பிறகு என் கணவர் என்னை யும் எங்கள் இரண்டு குழந்தைகளை யும் விட்டுப் பிரிந்து, வேறொரு பெண்ணைத் திருமணம் செய்தார்.

கடினமாகவேலைசெய்தேன்; பல வீடுகளில் தோட்டத்தைச் சுத்தம் செய்யும் பணிகளைச் செய்தேன். முதல் சில மாதப் படிப்புக்குத் தேவை யான பணத்தைத் திரட்ட கடினமாக முயன்றேன். என் அம்மா எனக்கு உதவினார். வேலைசெய்துகொண் டே படிக்கும் திட்டத்தில் என்னைச் சேர்த்து, என் படிப்புக் கட்டணத் தைச் செலுத்த பல்கலைக்கழகமும் உதவியது.

இறையியல் படிப்பில் சேரத் தீர்மானித்தேன். ஏனென்றால், தேவ னைப்பற்றி அதிகம் அறியவேண் டும்; நான் பெற்ற அதே நம்பிக் கையை மற்ற வாலிபர்களும் பெற வேண்டும் என்று விரும்பினேன். நாம் வாழ்க்கையில் எவ்வளவு தான் மோசமான தீர்மானங்களைச் செய்தாலும், நமக்கு இரண்டாம் வாய்ப்பைத் தருவதற்கு தேவன் எப்போதுமே ஆயத்தமாக இருக்கி றார். தம்மைவெளிப்படுத்துவதற்கு அவர் ஆவலோடு இருக்கிறார். மக்கள் தம்மைக் கண்டுகொள்ள வும், தம்மைப்பற்றி மற்றவர்களுக் குப் பிரசங்கிக்கவும் விரும்புகிறார். என் கனவில் பேசிய சத்தம்போன்று, நாம் நம் வழிகளை மாற்றவும், வித் தியாசமாக வாழவும், அவரைப் பின் பற்றவும் விரும்புகிறார். “மனந் திரும்பு, உலகம் முடியப்போகிறது” என்று அழைக்கிறார். இயேசு சீக் கிரம் வருகிறார்! அந்த நாளுக்காக ஆவலோடு காத்திருக்கிறேன்.

**பிளஸ்ஸிங் சடம்பட்சா**

## கதைக் குறிப்புகள்

- யாராவது ஒருவர் இந்தச் சம்பவத்தை தன் சொந்த அனுபவம்போலச் சொல்லட்டும்.
- தென் சாம்பியாவில் உள்ள ருசாங்கு பல்கலைக்கழகத்தில் இறையில் படிப்பில் இரண் டாம் படித்து வருகிறார் பிளஸ்ஸிங்.
- பிளஸ்ஸிங்கை யூட்யூப்பில் பார்ப்பதற்கு: bit.ly/Blessing-Chatambudza.
- முகநூலிலிருந்து படங்களைப் பதிவிறக்க: bit.ly/fb-mq.
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: *bit.ly/ sid-2022.*
- சாம்பியா ஒரு கிறிஸ்தவ நாடு; ஆனாலும் அங்கு பலர் பலவகை பாரம்பரிய நம்பிக்கை முறைகளைப் பின்பற்றி வருகிறார்கள். சாம்பியாவின் மக்களில் நான்கில் மூன்று பகு தியினர் புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவராக இருந்தாலும், மக்களில் ஐந்தில் ஒரு பகு தியினர் ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள்.